# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 02 - கதிர் - 69 | 27.06.2001 | புதன்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-



22கரட்டில் தரமான நகைத்தெரிவுகளுக்கு




பிரதான வீதி களுவாஞ்சிகுடி


# ஏறாவூரில் குண்டு வீச்சு

# ஒரு பொது மகன் பலி, 18 பேர் காயம்

(ஏறாவூர் நிருபர்)

**ஏறாவூர் றகுமானியா பாடசாலை வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற குண்டு வீச்சு சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் மூன்று பெண்கள் உட்பட பொது மக்கள் பதினெட்டுப் பேர் காயமடைந்து ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

காயமடைந்தவர்களில் நான்கு பேரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான முகம்மது காசிம் செய்யத் என்பவரே மரணமானவர்.

இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தக்கத்தையடுத்து இரு தரப்பினரும் வாள்,கத்தி, போன்ற கூரிய ஆயுதங்கள் சகிதம் மோதலில் ஈடுப்பட்டுள்ளனர். இதன் பின்னர் கைக்குண்டொன்று வீசப்பட்டது.

சம்பவத்தை அறிந்ததும் ஏறாவூர் தொலைத் தொடர்புபரிவர்த்தன நிலைய பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் கணக்கெடுப்புக்கு புலிகள் தடை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிசன மதிப்பீடு நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தடை விதித்துள்ளனர். இதற்கான கடிதங்கள் உரிய அதிகாரிகளுக்கு புலிகளால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்த குடிசன மதிப்பீடு முதற்கட்டமாக பணிகள் இடைநிறுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு,

(8ம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நிலை குறித்து மக்களுக்கு விளக்க அரசு ஏற்பாடு அமைச்சர் குழு நியமனம்

(நமது நிருபர்)

அரசாங்கத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் பொது மக்களுக்கு விளக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் பொதுக் கூட்டங்கள் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திங்கள் மாலை கூடிய ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக பொது மக்களுக்கு விளக்கும் வகையில் அமைச்சர்கள் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அமைச்சர்களான மங்கள சமரவீர, ஏ.எச்.எம். பௌசி, மகிந்த ராஜப

(8ம் பக்கம் பார்க்க)

## நிந்தவூர் அரபுக் கல்லூரி நேற்று முதல் மூடுவிழா

(நிந்தவூர் நிருபர் ஐ.எல்.எம். பாறூக்)

நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி நேற்று முதல் (26.06.2001) இழுத்து மூடப்பட்டுள்ளது.

கல்லூரியில், வெளியூர், உள்ளூர் மாணவர்கள் அனைவரும் நேற்று காலை தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்படி அரபுக் கல்லூரியின் நலனில் அக்கறைக் கொண்டோரெனக் கூறும் குழு ஒன்று நேற்று அதிகாலை ஆறு மணிக்கு கல்லூ

(8ம் பக்கம் பார்க்க)

## மருதானை பாலியல் சந்தேக நபர்கள் யூலை 6ம் திகதி அடையாள அணிவகுப்பு

(நமது நிருபர்)

மலையகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் மருதானையில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளும் யூலை 6ம் திகதி அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்படவுள்ளனர்.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி சரோஜினி

(8ம் பக்கம் பார்க்க)

## ரவூப்ஹக்கீமைச் சந்திக்க பேரியல் மறுப்பு!

(நமது நிருபர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பேரியல் அஷ்ரப் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று இடம் பெறவில்லை.

ரவூப் ஹக்கீமை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துமாறு பேரியல் அஷ்ரப்புக்கு விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்ததைத் தொடர்ந்து கட்சிக்கிடையில் பூசல் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அமைச்சர் பேரியல்

(8ம் பக்கம் பார்க்க)


### திருமண அழைப்பிதழ்

எதிர்வரும் 30.06.2001, சனிக்கிழமை காலை 10.30 க்கும் 11.30 க்கும் இடையிலான சுபவேளையில்,

எமது புத்திரன் திரு நிறைச்செல்வன் **அருள்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறைச்செல்வி **பிரியா** அவர்களுக்கும்

கொழும்பு லோட்டஸ் றூம், கிறான்ட் ஓரியன்றல் ஹொட்டேல் மண்டபத்தில் திருமணம் நடாத்த நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் தம்பதி சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ஆர்.எம்.செல்வராஜா
இல:3, பீரிஸ் மாவத்தை
களுபோவில.

திரு.திருமதி மோனகுருசாமி
2/5 அங்கிள் வீதி,
மட்டக்களப்பு.

✲ 08.07.2001 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியிலிருந்து, மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் திருமண வரவேற்புபசாரம் நடைபெறும்.

அத்தருணம் இடம் பெறவுள்ள மதியபோசன விருந்துபசாரத்தில் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- தவிர்க்க முடியாத சில காரணங்களால் உரிய அழைப்பிதழ் கிடையாதிருப்பினும் இதனை அழைப்பிதழாகக் கருதி நண்பர்கள், உறவினர்கள், வருகை தந்து சிறப்பிக்குமாறு தயவாய் கேட்கின்றோம்.

### கிழக்கு மாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இனி கொழும்புக்கு செல்ல தேவையில்லை. சமூக ஜோதி எம்.எச். எம்.பாறூக் அவர்களின் 20ஆண்டுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவையில் பொதுமக்களுக்கு இலவசமாக தலைநகரில் மட்டும் அல்லாது கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்ற அரச அங்கீகாரம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

ஆண்களுக்கு...........

* TILE PIXER.
* MASON.
* CARPENTER.
* PIANTER.
* ELECTRICIAN.
* ELECTRONIC TECHNICIAN.

போன்ற வேலை வாய்ப்புகள் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:


Fahim Enterprises (Pvt) Ltd,
152/1, 152/2 Main street.
Kattankudi.

அனுமதி இல.1755

advt


[illegible]

பொன்.செல்வராசா எம்.ப



பிணம் தின்னும் ஆக்கள் அங்க இருக்கக்குள்ள இனத்தைப் பற்றி எப்படி சிந்திப்பீங்க......

தினக்கதிர்
த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk

## மொட்டைத்தலைக்கும் முழந்தாளுக்கும்......

"ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், விடுதலைப்புலிகள் மீது இலங்கை அரசு விதித்துள்ள தடை நீக்கப்படும். இன்றைய அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ள சில பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிக்கப்படும், போரை நிறுத்தி அவசரகாலச்சட்டம் நீக்கப்படும்" என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பீடம் வாக்குறுதி அளித்ததால்தான் அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவாக 'ரெலோ' அமைப்பு கையெழுத்திட்டிருக்கிறதாம்.

'ரெலோ' அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இத்தகவலை ஊடகங்களுக்கு அம்பலப்படுத்தியிருப்பதாக நீர்ப்பாசன, நீர்வள நிருவாக அமைச்சர் சரத் அமுனுகம கண்டியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த விபரத்தை வெளியிட்ட அமைச்சர் அமுனுகம ஐக்கிய தேசியக்கட்சியினர் "யானைக்கு வாக்களித்தார்களா, புலிக்கு வாக்களித்தார்களா" என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சி இந்த தேசவிரோத வாக்குறுதிகளை அளித்ததன் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைத்து விட்டதாகவும் அமைச்சர் அமுனுகம கூறியிருக்கிறார்.

இந்தச் செய்தியை அரச கட்டுப்பாட்டிலுள்ள 'டெயிலி நியூஸ்' பத்திரிகை நேற்றைய இதழின் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தது.

அமைச்சர் அமுனுகம வெளியிட்டிருக்கும் கருத்துத்தான் அரசின் கொள்கையாக இருக்குமானால் இலங்கையில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தான் அர்த்தமாக இருக்கும்.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும், போருக்காகச் செலவிடப்படும், கோடிக்கணக்கான பணத்தை அபிவிருத்திக்குச் செலவிட்டு நாட்டை முன்னேற்ற வேண்டும். இவையெல்லாவற்றையும் விட போர்க்களத்தில் உயிரை விடும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் எண்ணிக்கை தொடராமல் தடுக்கப்பட வேண்டும் என்பது தான் நாட்டு மக்கள் அனைவரினதும் ஒரே விருப்பமும் பிரார்த்தனையுமாகும்.

விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு முன்வரவேண்டும், அத்தியாவசிய உணவுப்பொருள்களும், மருந்துகளும் தடை செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குப் போய்ச் சேர அனுமதிக்க வேண்டும், போரை நிறுத்தி அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டுமென்பதை தேச விரோதமானவை என்று அமைச்சர் எப்படிச்சொல்கிறார், ஏன் சொல்கிறார் என்பது புரியவில்லை.

இதே சமயம் இதே "டெய்லி நியூஸ்" பத்திரிகை நேற்றைய இதழின் முதல் பக்கத்தலைப்புச் செய்தியாக பிரமணாலங்குளத்தில் விடுதலைப்புலிகள் தமது தடையை மூடிவிட்டதாகவும், இதனால் உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் விடுவிக்கப்படாத பகுதிகளுக்குப் போய்ச் சேரமுடியாமலிருப்பதாக கவலையோடு தெரிவிக்கிறது.

பிரமணாலங்குளத்தடையை விடுதலைப்புலிகள் மூடிவிட்டதற்கு அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினால் தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய ஸ்திரமின்மையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல் தொடங்குவதற்கு தயாராகுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாக அந்தச் செய்தி கூறுகிறது. இது இப்போது நடந்து கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் அந்தத் தலைப்புச் செய்தி தெரிவிக்கிறது.

"மொட்டைத்தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவதில்" அரச கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப்பத்திரிகைகள் எவருக்கும் சளைத்தவைகளல்ல.

கடந்த பொதுத்தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், விடுதலைப்புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகப் பிரசாரம் செய்து அந்தக்கட்சியையும் பயங்கரவாதிகளுடன் சேர்த்து மக்களை வெறுப்புக்கொள்ளச் செய்ய முயற்சி செய்யப்பட்டது.

இது எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. இப்பொழுதும் இதே முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற்றம் ஆகிய பிரச்சினைகளை பயங்கரவாதிகளுடன் இணைத்துப் பிரசாரம் செய்து பேரினவாதிகளின் துணையோடு மிகப்பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிக்கு வரலாமென்ற எண்ணத்துடன் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்கு அரசு ஆயத்தமாகின்றதா?

இன்றைய அரசியல் போக்கும் அரசின் செயலும் அமுனுகமவின் பேச்சும் இப்படி ஐயம் கொள்ள இடமளிக்கிறது!

## கல்லடி முகத்துவாரம் ஸ்ரீ முத்து மாரியம்மன்
# ஆலய வருடாந்த உற்சவம்

மீன்பாடும் தேன் நாடாம் மட்டுமா நகரின் கிழக்கே ஆற்றங்கரை அருகே அமைந்த அன்னை பராசக்தியான கல்லடி முகத்துவாரம் ஸ்ரீ முத்து மாரியம்மனின் வருடாந்த உற்சவம் ஆனி மாதம் 28ம் திகதி கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி ஆடி 05ம் திகதி காலை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

நம் மூதாதையர் அமைத்துத் தந்த இவ்வாலயம் கல்லடி முகத்துவாரம் ஸ்ரீ முத்து மாரியம்மன் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது. தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற நிருவாகத்தினரும், பூசகரும் கோயில் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தும் முக்கியஸ்தர்களாக காணப்படுகிறார்கள்.



### ஆலயத்தின் சிறப்பம்சங்கள்

**பூசைகள் :-**

1. **நாகதம்பிரான பூசை:-**
சிவபெருமானின் கழுத்தில் இருக்கின்ற தெய்வத்தை வழிபட்டு குடும்பப் பெண்கள் பாற்சோறு சமைத்து அமுது படைப்பர். குழந்தை பெற்று நோய் நொடியின்றி வாழ அருள் பாலிக்கிறார்.

2. **காத்தவராயன் பூசை:-**
இப் பூசையின் போது தெய்வாதி ஒருவர் ஆடி, மக்களின் மனக்குறைகளை உணர்ந்து அதற்கேற்றவாறு கட்டுச் சொல்லி ஆலத்தில் ஆடி மக்களின் மனங்களை தூய்மையாக்குவதுடன் துன்பங்களையும் போக்குவான்.

3. **காளியம்மன் பூசை :-**
இங்கிருக்கும் காளியம்மன் ஆலயத்தின் முன்பாக தீக்குழி மூட்டப்பட்டு, தீமிதிப்பு நடைபெறும். ஆரத்திப் பெண்களும் இப் பூசையில் ஈடுபடுவர். சிறுவர் முதல் முதியோர் வரை தீயிலிறங்கி தமது துன்பத்தை போக்குவர். தலைத் தெய்வமும், பூசகரும் முதலில் தீயிலிறங்கி தமது ஆராதனையை ஆரம்பித்து வைப்பர். தெய்வாதிகள் சாட்டை பெறுவதும், பலியெடுத்தலும் மிகவும் விசேட அம்சமாகும்.

4. **பிள்ளையார் பூசை**
நிருவாக சபையினரின் பெரும் முயற்சியினால் இவ்வாண்டிலேதான் கட்டடக்கலை அம்சங்கள் பொருந்திய பிள்ளையாரின் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது வினைகளை பூசையில் வழிபட்டு நீக்கிக் கொள்வர்.

5. **வைரவர் பூசை**
சிறு தெய்வ வழிபாட்டில் பிரதான தெய்வமாகக் கருதப்படுவது வைரவ வழிபாடாகும். தீர்த்தம் முடிந்து மூன்றாம் நாள் மக்கள் அனைவரும் ஒன்று கூடி ரொட்டி, பால், பழம் படைத்து வைரவர் காவியம் பாடி மக்களையும், சுற்றத்தாரையும் காவல் காக்கும் தெய்வமாக கருதி அன்றைய தினம் தீக்குளிக்குப்பால் ஊற்றி நன்றிக்கடனை செலுத்துவர்

### அன்னதானம்

தான தர்மங்களில் மிகச் சிறந்த அன்னதானத்தை ஏழு நாட்களில் சங்கு உபயகாரர்களால், அவ்வவ் நாட்களில் சோறு, கறி, தயிர் முதலியவற்றுடன், ஆலய பூசகர் தொண்டர்கள் நிருவாக சபையினர், தெய்வாதிகள் மற்றும் ஏழை மக்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்திருக்க அமுது படைப்பது சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும், எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்வாக அமைந்து விடுவது மிக மகிழச்சி கரமான விடயமாகும்.

### பாணக்கம்

அம்மனின் பிரதான மண்டபத்தில் வீற்றிருக்கும் மாரித்தாயாரின் அருள் வேண்டித்தவம் கிடக்கும் மக்கள், பால், பழம், சர்க்கரை, தேன் முதலிய பொருட்களால் ஆக்கப்பட்ட தீர்த்தமானது பாணக்கம் என்று கூறப்படுகின்றது.

**வே.ஜெயரெட்ணம்**

நம் முன்னோரின் வழிகாட்டலில் தயார்படுத்தப்படும் இத்தீர்த்தம் பருகி நோய் நொடி பிணி என்பன நீங்கி புத்துயிர் அளிக்க உதவும் இத்தீர்த்தம் தேவாமிர்தத்துக்கு ஒப்பாக ஏற்கும் தன்மை இங்கு காணப்படுகிறது.

இறுதிநாள் இரவு குளிர்த்திபாடி அம்மனின் அகோரம் தணிந்து மக்களின் மனங்களையும் குளிர்ச்சி அடையச்செய்து அருள்பாலிக்கும் தினமாகக் கருதப்படுகின்றது. அடுத்தநாள் காலை தீர்த்தம் ஆடி அம்மனுக்கு வாழிபாடி பூ போட்டு கதவு பூட்டி அம்மனின் ஆராதனை முடிக்கும் கண்கொள்ளாக் காட்சி என்றென்றும் நம் வாழ்வில் நிலைத்து நிற்பது மறக்க முடியாதவைகளாக அமைந்து பரவசப்படுத்தும் அம்மனின் அருள் பெற்று அனைவரும் ஒன்றுபட்டு மனத் தூய்மையாகவும், வாழ எல்லாம் வல்ல அம்மாள் அருள் தருவாள் என்பது எமது நம்பிக்கையாகும்.

## சிறிலங்கா தாயக நீதிக்கட்சித் தலைவர் பாக்கர் அக்பர் ஹலால்தீன்

(மூதூர்)



ஒலுவிலில் சட்ட, மருத்துவ கல்லூரிகளை நிறுவுமாறு சிறிலங்கா தாயக நீதிக் கட்சி அரசைக் கோரியுள்ளது. இக் கட்சியின் தலைவர் பாக்கர் அப்துல் அக்பர் ஹலால்தீன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். பேராளர் மாநாட்டில் கட்சி தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது உப நிலையம் ஒன்றை அட்டாளைச்சேனை அல்லது கல்முனையில் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தரு சின்னம் பெற்று சாரணீய சேவையில் ஈடுபடுவோருக்கு அரசு விசேடமான்யமும் இலவச பஸ் பாஸ், இலவச தபால், தொலைபேசி சேவை வழங்க வேண்டும் என்றும், சகல பாடசாலைகளிலும் முதலுதவி, சாரணீய குழுக்கள் அமைக்க அரசு உதவ வேண்டும் என்றும் இக்கட்சி அரசைக் கோரியுள்ளதாக பாக்கர் ஹலால்தீன் குறிப்பிட்டார்.

## வந்தாறுமூலை வைகுந்த வாசனுக்கு மகோற்சவப் பெருவிழா!

(நல்லரெட்ணம்)

கிழக்கிலங்கையின் திருப்பதியாக விளங்கும் வந்தாறுமூலை ஸ்ரீ.மகாவிஷ்ணு ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் கடந்த 23ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இனிது நடைபெற்று வருகின்றது.

பன்னிரெண்டு நாள் உற்சவத்தைத் தொடர்ந்து அடுத்த மாதம் 5ம் திகதி அதிகாலை கருவன்கேணி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கிழக்கிலங்கையில் சைவமும், சாக்தமும் தமிழர் வழிபாடாகவேரூன்றிய போதும் காத்தல் கடவுள் கண்ணனாம் அவன் அண்ட சராசரங்களையும் காத்து ரட்சிப்பவன் எனும் தொனிப் பொருளில் அவன் அடிதேடி வரும் அடியவர்க்கு அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளலாக கிருஷ்ண வழிபாடு விருத்தியடைந்த தலமாக வந்தாறுமூலை திருப்பதி விளங்குகிறது. பஜனை கீர்த்தனை மற்றும் அரிகோபிந்தா என்ற நாமங்கள் முழங்க வழிபடும் தலமாக விளங்குகின்றது.

இத்தனை சிறப்பு மிக்க இந்த தெய்வீக திருத்தலத்தின் உற்சவங்களின் உபயகாரர்களாக குலமரபுகளில் பரம்பரை பரம்பரையாக வரும் குடியினரே செய்து வருகின்றனர்.

முதல் நாள் கொடியேற்றத்திருவிழா ஆலயத்தாலும் இரண்டாம் நாள் திருவிழா ஆலய பூசகராலும் நடாத்தப்படுகிறது.

மூன்றாம் நாள் உற்சவத்தில் இருந்து 12ம் நாள் திருவிழா வரை முறையே புதூர்குடி, அத்தியாகுடி, கழுவத்தன் பணிக்கக்குடி, செட்டியாகுடி, கழுத்தன்குடி, காவேல்கொண்டகுடி, புலவனார் குடும்பம், மஞ்சள் பிரமக்குட்டிக்குடி, பெரியபயாக்குட்டிக்குடி ஆகிய குடியினரால் நடாத்தப்படுகிறது.

# ''தடையை நீக்கி புலிகளுடன் பேசினாலே நாட்டில் சமாதானம் நிலவ வழி பிறக்கும்''

(காரைதீவு நிருபர்)

''அம்பாறை நகரில் பிறந்து வளர்ந்து படித்த எனக்கு தமிழன் என்ற ஒரே காரணத்தினால் இன்று இங்கு வாழ முடியாத நிலை. முதலில் இந்நிலை மாறவேண்டும். இனவாதிகள் ஒரங்கட்டப்பட்டால் தான் சமாதானம் இந்நாட்டில் உருவாகும்''

என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் அம்பாறையில் நடைபெற்ற நகரசபைக்கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார். 150 சிங்கள ஊழியர்கள் முன்னிலையில் சிங்களத்தில் தலைவர் லோகநாதன் மேலும் உரையாற்றுகையில்

''சமாதானத்திற்காக இன்று அரசும் எதிர்க்கட்சியும் பேச்சுவார்த்தை நடத்துகிறது. பாராட்டுகிறோம். ஆனால் அரசு புலிகளோடு பேசவேண்டும்.

அவர்களுக்குள்ள தடையை நீக்கிப் பேசினால் ஒழிய இந்த நாட்டில் எந்தத்தீர்வும் வரப்போவதில்லை.

கொழும்பிலுள்ள இனவாதிகள் சிலரின் கைப்பிடியில் யுத்தத்திற்கான முடிவு அகப்பட்டுள்ளது. அவர்களது தடையை முதலில் அரசு உடைத்தெறிய வேண்டும். இதற்காக புத்தி ஜீவிகள், தொழிற்சங்கங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதற்குக் காரணம் காட்டி அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகளை தாமதப்படுத்துவது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அரச நிர்வாகம் சீராக இடம்பெற வேண்டுமெனின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டியது அவசியம்.

**இராஜினாமா**

எமது சங்கத்தில் ஆயிரமான ஊழியர்களும் அங்கம் வகிக்கின்றனர். எந்த இனத்திற்கும் அநீதி இழைக்கும் வண்ணம் எந்தவொரு தீர்மானமும் எமது சங்கம் எடுக்காது. ஒரு இனம் பாதிக்கும் சங்கம் இடமளிக்காது. அப்படி தீர்மானம் எடுக்கப்படுமானால் மறுகணம் பதவியை நான் இராஜினாமா செய்வேன். சங்கத்தை சீர்குலைக்க சிலர் திட்டமிட்ட சதி முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. நான் தலைமைப்பதவியில் இருக்கும் வரை எந்த அநீதி நடைபெறவும் அனுமதிக்கமாட்டேன் என்று பேசினார்.

நிர்வாக அதிகாரி கமலா சேரசிங்க, செயலாளர் ரி.காமினி ஆகியோரும் சங்கம் ஆற்றி வரும் அளப்பரிய சேவைகளையிட்டு பாராட்டுக்களைத் தெரிவித்தனர். 150 ஊழியர்களுக்கும் நிருவாக தொடர்பான கருத்தரங்கும் இறுதியில் இரு மணிநேரம் நடாத்தப்பட்டது.

# திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு சண்முகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப்பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் கலந்து கொள்வார்.

சண்முகா கலாலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை உதவிப் பணிப்பாளர் எதிர்மன்னசிங்கம் திரை நீக்கம் செய்து வைப்பார்.

திருவள்ளுவர் திரை நீக்க வைபவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி, பேச்சு, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அன்று பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன், பிரதேச கல்விப்பணிப்பாளர் திருமதி.ம.சத்தியதேவா ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொள்வார்கள்.

சுவாமி விபுலானந்தர் சிலை அமைப்பு புகழ் புல்லுமலை நல்லரெத்தினம் சிற்பி இந்தத் திருவள்ளுவர் சிலையையும் வடிவமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று உகந்தை மலை முருகனாலய கும்பாபிஷேகம்

(காரைதீவு நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று (புதன்கிழமை) நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்தும் பக்தர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆலயத்தை சென்றடைந்துள்ளனர்.

நேற்று(செவ்வாய்) எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் இடம்பெறும். பக்தர்கள் பெரும்பாலும் உழவு இயந்திரங்களில் வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த தசாப்தகாலத்திற்குப் பிறகு பஸ் சேவை ஆலயம் வரை இம்முறை நடாத்தப்படுகிறது.

பாணமையிலிருந்து உகந்தை வரை வீதி சற்று மோசமாக இருப்பினும் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. அடர்ந்த கானகத்தின் மத்தியில் மலைகளால் சூழப்பட்ட பிரதேசத்தில் இவ்வாலயம் இயற்கையான சூழ்நிலையில் அமையப்பெற்றுள்ளது.

மாத்தளை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கே.ரி.நந்தகுமார், தம்பிலுவில் ஸ்ரீசித்தி விநாயகராலய குரு சைவப்புலவர் சிவஸ்ரீ க.லோகநாதக்குருக்கள் ஆகியோர் தலைமையில் இன்றைய கும்பாபிஷேகம் நடைபெறும். கதிர்காமத்திற்கு காலநடையாகச் செல்வோர் உகந்தையில் தங்கியிருந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

# பல் அடைக்கும் இயந்திரம் பழுது; மக்கள் அவதி!

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பல் அடைக்கும் இயந்திரம் பழுதடைந்திருப்பதனால் கடந்த ஆறுமாத காலமாக பல்நோயாளிகள் பல் அடைக்க வேறிடங்களுக்கு அலைய வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் வயோதிபர்கள் வரை பற்களைப் பிடுங்காமல் பாதுகாத்துக் கொள்ள இவ் அடைப்பு வேலையை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால், தற்போது இங்கு பல் பிடுங்கும் வேலை மட்டுமே நடைபெறுவதாக நோயாளிகள் கூறுகின்றனர்.

பல்வைத்தியர் பாக்கர் கேட்டபோது இது பற்றிக் கேட்ட போது பல் அடைக்கும் இயந்திரத்தொகுதி பழுதடைந்துள்ளது. நாம் பலமுறை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவித்திருந்தும் இன்னும் திருத்தப்படவில்லை. வைத்தியசாலை நிருவாகமும் பல முயற்சிகளை எடுத்துள்ளது. வெகு விரைவில் திருத்தப்படும் பின்னர் பல் அடைக்கும் பணி ஆரம்பமாகும் என்று கூறினார்.

பல் நோயாளிகள் தற்போது அம்பாறை கல்முனை என்று அலைவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# ஜனாதிபதியின் கூற்றுக்கு றவூப் ஹக்கீம் மறுப்பு

(நமது நிருபர்)

றவூப் ஹக்கீமை பதவி நீக்கம் செய்தது தொடர்பாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்கு றவூப் ஹக்கீம் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக றவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

தேசிய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாகவும், அமைச்சரவை கூட்டு பொறுப்புக்கு குந்தகமான முறையில் செயற்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் என்ன காரணம் என்பதை தெளிவுபடுத்தவில்லை.

இதே சமயம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமான முறையில் தான் செயற்படவில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸினால் பொது ஜன ஐக்கிய முன்னணியிடம் முன்வைக்கப்பட்ட பலகோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லையெனவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்பட வேண்டும். அம்பாறையில் தீர்மானம்

(காரைதீவு நிருபர்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் அம்பாறை நகர சபைக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் சனியன்று அம்பாறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பாறை பிரதேச செயலக நிருவாக அதிகாரி திருமதி கமலா சேரசிங்க, நகரசபை செயலாளர் ரி.காமினி, சங்க இணைப்பாளர் ரோபல்ரீஸ் உட்பட பலரும் உரையாற்றினர்.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

10 வருடங்களுக்கு மேலாக அம்பாறை நகர சபையில் கடமையாற்றிவருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும். நிரந்தர சேவையிலுள்ளவர்களை அம்பாறை நகர சபை நிருவாகம் நிரந்தர நியமனம் வழங்கியது. எனவே பாதிக்கப்பட்ட 10 வருடத்துக்கு கூடுதலான சேவையிலுள்ளவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு சீருடை வழங்கப்படாதுள்ள 150 ஊழியர்களுக்கும் சீருடை வழங்கப்பட வேண்டும்.

அலுவலக பணியாளர் சேவை தரம் III இல் உள்ளோர் காவலாளி சுமையைச் செய்கின்றனர். அவர்களுக்கான தரம் உயர்வுகள் வழங்கப்பட்டு அதற்குரிய மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

நகரசபை சாரதிகளுக்கு பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும். நகரசபை ஊழியர்கள் இதுவரை கடன் வசதியை அனுபவிக்கவில்லை எனவே அதனைப் பெற வகை செய்ய வேண்டும்.

# குடிசன மதிப்பீடு அலுவலர்களுக்கு தேவைப்படும் போது கடமை லீவு

(ஓட்டமாவடி நிருபர்)

இலங்கை முழுவதும் ஆரம்பிக்கப்பட்டு குடிசன வீடு வசதிகள் தொகைமதிப்பு வேலைகளில் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களாக, மேற்பார்வை உத்தியோகத்தர்களாக மத்திய அரசாங்க மற்றும் மாகாண பொதுச் சேவைகளிலிருந்து பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் இவர்களுக்கு கடமை லீவு வழங்க வேண்டும் என்று குடிசன மதிப்பீட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதேச சபைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள இச் சுற்றறிக்கை அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத் தொகை மதிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படுகின்ற வேளையெல்லாம் கடமை லீவு வழங்குமாறு அச் சுற்றறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

# நிருவாகிகள்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்க கல்முனைக் கிளையின் புதிய நிருவாகிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது. தலைவராக பி.யோகேஸ்வரன், உபதலைவராக வீரசிங்கம், செயலாளராக ரி.ரிஷிகேசந்திரா, உபசெயலாளராக எஸ்.முரளிதரன், கணக்காய்வாளராக ... தெரிவாகியுள்ளனர்.


**உங்கள் வீட்டுக்குத் தேவையான**

ஒட்டு மா, மூங்கில், நெல்லி, கொய்யா, பலா, விழி, அம்பரல்லா, தேக்கு மற்றும் அலங்கார மரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்:-

மன்று, சரவணா வீதி இல.-19, கல்லடி மட்டக்களப்பு.

தொலைபேசி இலக்கம்:- 22500 Advt



**3ம் மாத நினைவு**



**செல்வன் சஞ்சீவ் மகேந்திரன்**

காற்றோடு கலந்தாயோ கண்ணா
எம் கனவாக மறைந்தாயோ
எம்மோடு இணைந்திருக்க மகனே என்று நீ வருவாயோ?
மூன்று மாதங்களல்ல முந்நூறு ஆண்டுகளானாலும் உன் நினைவு எம் மனதைவிட்டு நீங்காது!

உன் பிரிவால் துயருற்று நிற்கும், அப்பா, அம்மா, அக்கா, அத்தான், மருமகன்

Advt

# தண்ணீர் கொண்டுவர ஆந்திர முதல்வரை தமிழக முதல்வர் சந்தித்துப் பேச கோரிக்கை

(சென்னை)

சென்னையில் தண்ணீர் பஞ்சத்தை நீக்கி சென்னைக்கு கிரிஷ்ணா நதி நீரைக் கொண்டுவருவது தொடர்பாக ஆந்திர முதலமைச்சரை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சந்தித்து முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று நேற்று முன்தினம் சென்னையில் கூடிய தி.மு.க. தலைமையிலான தேசிய கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

சென்னையில் அவசரமாக கூடிய கூட்டணிக் கட்சிகளின் நேற்றைய கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த காலத்தில் கிரிஷ்ணா நதி நீர் வழங்கியது போல் சென்னையில் நிலவும் தண்ணீர் நெருக்கடி நிலையை உணர்ந்து ஆந்திர முதலமைச்சர் தண்ணீரை வழங்குமாறு அந்தத் தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் 65 கோடி ரூபா பெறுமதியான புழுங்கல் அரிசி கொள்வனவு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட 29 அரச அதிகாரிகளை மீண்டும் பதவியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இத்தீர்மானம் கூறுகின்றது. உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் வாக்காளர் பட்டியல் மாற்றப்பட வேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மாநிலத்திலுள்ள மதுக்கடைகளை ஏலம் விடுவதன் மூலம் அரசுக்கு கூடுதல் நிதி கிடைக்கும் என்றும் இக் கூட்டத்தில் கூறப்பட்டது.

# வீரப்பனிடம் முன்னர் தூது சென்ற குளத்தூர் மணி கைது

(சென்னை)

சந்தனமரக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ள போதிலும் அந்தக் காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களின் நடமாட்டத்துக்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை என்று தமிழ்நாடு கர்நாடக கூட்டு அதிரடிப்படையின் தலைவர் வோல்டர் தேவாரம் கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் இரு மாநில உயர் அதிகாரிகளின் கூட்டு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தேவாரம் பழங்குடி மக்களுக்கு தம்மாலான உதவிகள் அனைத்தையும் அதிரடிப்படையினர் வழங்கி வருவதாகக் கூறினார்.

கர்நாடக மாநில தலைவர் கெம்பையா, இன்ஸ்பெக்டர் ஏ.விஜயகுமார் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதே நேரம் குளத்தூர் மணி நேற்று முன்தினம் இரவு காவல் துறையினரால் திடீர் என்று மோட்டரில் வைத்து கைது செய்யப்பட்டார். சந்தனக் கடத்தல் வீரப்பனின் பிடியிலிருந்து கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு கடந்த அரசின் தூதராக அவர் காட்டிற்குள் சென்றது குறிப்பிடத்தக்கது.

# விடுதலைச் சிறுத்தைத் தலைவர் விடுதலை

(சென்னை)

தமிழ் நாட்டின் முக்கிய தலக் கட்சிகளில் ஒன்றான விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் திருமாவளவன் நேற்று விடுதலை செய்யப்பட்டார். அவர் இம்மாதம் 21ம் திகதி கைது செய்யப்பட்டார். விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் மாநிலப் பொறுப்பாளர் பாண்டியன் என்பவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறை விசாரணை செய்யவேண்டும் என்றும் கொலையாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்று கோரியும் மதுரையில் முழு கடை அடைப்பு செய்யப்படும் என்ற அறிவித்தலை அடுத்து அவரும் அவருடைய ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

இதையிட்டு பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. கடையடைப்பு நடைபெற்ற நிலையும் இன்னமும் நிலவுகிறது.

இவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று மு.கருணாநிதி உட்பட எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருந்தார். இவரை விடுதலை செய்யுமாறு 12 மணிநேர கடையடைப்பு பூரணமாக வெற்றியளித்ததுடன் மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள் பொலிஸார் மீது சரமாரியாக கற்களை வீசியதால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்ச் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை. இந்நிலையில் திருமாவளவன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## ''எயிட்சின் தீவிரத்தை உலகம் அறிந்துவிட்டது''

(நியுயோர்க்)

எயிட்ஸ் நோய் கண்டு பிடிக்கப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் உலகம் அதன் தீவிரத்தை அறிந்துவிட்டதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்தார்.

நியுயோர்க் நகரில் தொடங்கியுள்ள மூன்றுநாள் எயிட்ஸ் பற்றிய மாநாட்டில் பேசிய கொபி அனான் "முன்னுதாரணமற்ற நெருக்கடி" என்று அவர் வர்ணித்த எயிட்சைத் தடுக்க உலகளாவிய ஒருங்கிணைப்பு நடவடிக்கை இறுதியாக நடத்தப்படக் கூடும் என்று அவர் நம்புவதாகத் தெரிவித்தார்.

இந்த நோய் இரண்டு கோடி உயிர்களுக்கு மேல் பலி வாங்கியுள்ளது. எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் நோயுடன் சகாரா பாலைவனத்துக்குக் கீழுள்ள பகுதிகளில் மூன்று கோடிக்கும் மேற்பட்டோர் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இத்தொற்று நோயை சமாளிக்க உலகத் தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகள், ஒருங்கிணைக்கப்பட்ட புத்தா முன்னெடுப்பை உருவாக்கியுள்ளனர்.

## பெருவின் உளவுத் தலைவர் தலைநகருக்கு கொண்டுவரப்பட்டார்

(லீமா)

முன்னாள் பெரு நாட்டு உளவுத்துறைத் தலைவர், மொண்டெஸீனோ பெரு தலைநகர் லீமாவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறார். எட்டு வருடங்கள் பொலிஸாரிடம் அகப்படாமல் ஒழிந்து வந்த இவர் வார இறுதியில் வெனிசுலாவில் கைது செய்யப்பட்டார்.

அவர் லீமா வந்தடைந்தவுடன் அங்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்த விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹெலிகொப்டர் மூலம் விபரம் தெரிவிக்கப்படாத இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். பதவி இறக்கப்பட்ட முன்னாள் அதிபர் அல்பேர்டோ பூஜி மோரியின் வலது கரமாக அவர் இருந்த பத்தாண்டு காலத்தில் மொன்ரஸீனோ நீண்ட குற்றச்சாட்டு பட்டியலில் அடங்குகிறார். அவர் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதில், சட்ட விரோத ஆயுத விற்பனையில், மனித உரிமை மீறல்கள், மற்றும் மிரட்டி பணம் பறிப்பது போன்றவைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இவர் ஆயுள் தண்டனையை எதிர்கொள்ளக்கூடும்.

# மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(மண்முனைப்பற்று நிருபர்)

மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே 9 கிலோ மீற்றர் அப்பால் அமைந்துள்ள மண்முனைப்பற்று பிரதேசத்திற்கு நடப்பாண்டுத் திட்டத்திற்கென மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரால் அவர்களது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான அலிசாகீர் மௌலானா ஆரையம்பதி மகா வித்தியாலயத்திற்கு பாண்டு வாத்தியக் கருவி கொள்வனவிற்கென 70,000 ரூபாவும் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தின் தளபாட வசதிக்கென 30,000 ரூபாவும் மற்றும் கிச்சாம்பள்ளக் கிராம நிதி புனரமைப்பிற்கு என 50,000 ரூபாவும், மேலும் பாலமுனை கிராமத்தில் மின்சார விநியோகத்திற்கென பாலமுனையில் மொகைதீன் கைசா வீதி கிறவல் பரவ 60,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தினால் இரண்டு திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செல்வாநகர் சிவா வித்தியாலய சிறுவர் விளையாட்டு மைதானத்தின் விளையாட்டு உபகரணங்களிற்கு 40,000 ரூபாவும் மற்றும் கிரான்குள தருமரெத்தின வித்தியாலயத்தின் தளபாட வசதிகளுக்கு 50,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட பிரதியமைச்சரான எஸ். கணேசமூர்த்தியினால் காங்கேயனோடை அல் அக்சா வித்தியாலயத்தின் அலுவலக தளபாடத்திற்கென 50,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மாக்கண்டி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மாக்கண்டி விவசாய நிலங்களில் பயிர் செய்து கடந்த 20 வருடங்களுக்கு முன் வெளியேற்றப்பட்ட நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை, தமிழ், முஸ்லிம் விவசாயிகள் தமக்கு மாற்றீடாக காணியோ அல்லது நஷ்டஈடோ வழங்கப்பட வேண்டும் என அண்மையில் கல்முனைக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் பேரியல் அஷ்ரப்பிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

எம்.பி யின் பணிப்பின் பேரில் கல்முனை இணைப்பாளர் கே.எம்.றஸாக் கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீலை மாக்கண்டி விடயமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டதற்கிணங்க செயலாளர் பளீல் அண்மையில் பேரியல் அஷ்ரப்பிற்கும் இணைப்புச் செயலாளருக்கும் அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளார்.

# ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் மண் எடுக்க அனுமதி

(கல்லாறு நிருபர்)

மண்முனைத் தென் எருவிற்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெரிய கல்லாற்றில் கடற்கரை மண் எடுப்பதற்குத் தற்போது புதிய நடைமுறை பின்பற்றப்படுகிறது.

அண்மையில் குறித்த பிரதேச செயலக உத்தியோகத்தர் வாராந்தக் கூட்டம் பிரதேச செயலாளர் பிரபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற போது பிரதேச செயலகத்திற்கு வெளியேயும் பெரிய கல்லாற்றுக் கடற்கரை மண் கொண்டுசெல்லப்பட்டு விற்கப்படுவது சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் பெரிய கல்லாறு கடல் அரிப்பு அபாயத்தை எதிர்நோக்குவதும், சூழல் பாதிப்பு ஏற்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து மண் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட துறை நீலாவணை, பெரிய கல்லாறு கிராமத்தவர்களின் மண் தேவைகளை கிராம சேவகர்கள் தேவையானவர்களின் வீட்டிற்குச் சென்று உறுதி படுத்திய பின்னரே அனுமதிப் பத்திரம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஞாயிற்றுக் கிழமை மட்டுமே மண் அகழ்விற்கு அனுமதிப்பதெனவும் முகத்துவாரப் பகுதியில் மட்டுமே மண் அகழ்வை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவியருக்கு பொருளாதார மேம்பாட்டுக் கருத்தரங்கு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த குடும்பத் தலைவிகளுக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஆலோசனைகளை வழங்கி ஊக்குவிப்பதற்கு மான ஒருநாள் பயிற்சிநெறிக் கருத்தரங்கு கல்முனைப் பிரதேசத்தில் இயங்கும் உயிர் பிழைத்தோர் உண்டியல் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இப் பயிற்சிப் பட்டறைக்கு கிழக்குப் பல்கலைக்கழக உயர்பீட பொருளியல் விரிவுரையாளர் கே. தங்கையா கலந்துகொண்டார்.

மற்றும், நிர்வாக உத்தியோகத்தர் கருணாரெத்தின, திட்ட இணைப்பாளர் அகல்யா சந்திரராஜ், சோமச்சரன், கே. கனகரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அதிபர்களுக்கான மாநாடு தனிச்சிங்களத்தில், தமிழ் அதிபர்கள் மொழி புரியாது திண்டாட்டம்

(காரைதீவு நிருபர்)

இலங்கை கல்வி அமைச்சு கொழும்பு இசுருபாயவில் நடாத்திய அதிபர்களுக்கான மாநாடு தனிச்சிங்கள மொழியில் அமைந்ததனால் தமிழ் மொழி மூல அதிபர்கள் திண்டாட வேண்டிய துரதிஷ்ட நிலையேற்பட்டது.

2500 மாணவர்களுக்கு மேற்பட்ட தொகையினைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான ஒரு நாள் மாநாடு கடந்த வியாழனன்று இசுருபாயவிலுள்ள கல்வியமைச்சில் நடைபெற்றது.

புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பாக விரிவுரையாற்றப்பட்டதாக தெரிகிறது.

கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி. தாராடிமெல் இம் மாநாட்டை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பேசி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

தொடர்ந்து விரிவுரையாற்றிய அனைவரும் தனிச் சிங்களத்தில் விரிவுரையாற்றியதாக கூறப்படுகிறது.

சிங்களம் தெரியாத தமிழ் பேசும் அதிபர்கள் விஷயம் புரியாமல் திண்டாட வேண்டியிருந்தது.

தமிழ் மொழி பெயர்ப்பை நடாத்தியிருக்கக் கூடாதா என்று அதிபர்கள் அங்கலாய்த்தனர்.

# ''முஸ்லிம் தமிழ் சமூகங்கள் ஒன்றாக சேர்ந்திருக்கும் காலம் வந்துள்ளது''

## -முன்னாள் பிரதியமைச்சர்-

(ஓட்டமாவடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம், தமிழ், சமூகங்கள் ஒன்றாக சேர்ந்திருக்க வேண்டிய காலம் வந்துள்ளது. இதனை நல்லதொரு சகுனமாக கருதி இரு சமூகங்களும் புரிந்துணர்வோடு எமது அபிலாசைகளை வென்றெடுக்க உழைக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் நீரியல் வளத்துறை பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.பி.எம்.அப்துல் காதர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் நடைபெற்ற 13வது, 14வது, 15வது பரிசளிப்பு விழாவிலும் மூன்றுமாடிக் கட்டடத் திறப்பு விழாவிலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் எம்.சி.எச்.முகம்மட் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் பிரதியமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

அமைச்சர் பதவிகள் ஒன்றும் பெரியவை அல்ல. அதையும் விட பெரிய சக்தி எமக்குண்டு. எமது தலைமைத்துவத்தின் உறுதிப்பாட்டுடன் நான் எனக்கு வாக்களித்த மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளேன்.

கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக இல்லாதிருந்த கல்குடாத்தொகுதி முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை கடந்த 2000ம் ஆண்டு வென்றெடுத்த போதிலும், அதனால் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாமல் போய் விடுமோ என்ற அச்சம் கொள்ள வேண்டாம். கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களின் எதிர்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்ய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைமைத்துவம் உறுதியளித்துள்ளது.

நாம் ஒரே புரிந்துணர்வோடு, ஒன்றாக சேர்ந்து இந்த நாட்டில் எந்த கட்சி ஆட்சிபுரிந்தாலும் எமது தேவைகள் கோரிக்கைகளை வென்றெடுக்க ஒரு போதும் பின் நிற்கப் போவதில்லை.

ஆனால் முஸ்லிம் மக்களை மதித்து அவர்களின் உணர்வுபூர்வமான செயற்பாடுகளை, கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாது முஸ்லிம் சமூகத்தை அரசியலிலிருந்து அநாதையாக்க முனையும் இந்த அரசுக்கு முன் நாம் ஒரு போதும் வாய் மூடி நிற்கக் கூடாது.

இவ்விழாவில் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் அலிசாஹிர் மௌலானா, சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பாடசாலைக் கல்விப்பணிப்பாளரும், பதில் கல்குடா வலயக்கல்விப்பணிப்பாளருமான ஆ.குணராஜரெட்ணம், கல்குடா வலய பிரதி கல்விப்பணிப்பாளர் யூ.எல்.எம். ஜெய்னுதீன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# நபிகள் காட்டிய வாழ்க்கை முறையை மறந்ததால் துன்பம்''

(ஏறாவூர் நிருபர்)

"சமூகத்தில் பிரிவினையை ஏற்படுத்த நபிகள் நாயகம் (ஸல்) ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஒற்றுமைக்காகவும் ஐக்கியத்திற்காகவும் செயற்பட்டார்கள்"

ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்களது ஏற்பாட்டின் பேரில் சங்கத் தலைவர் எம்.ஐ.அகமட் லெப்பை தலைமையில் நடைபெற்ற விசேட பிரார்த்தனை வைபவத்தில் சிறப்புரையாற்றிய மௌலவி ஏ.எல்.பதுறுதீன் (பலாஹி) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுறுதீன் மௌலவி தொடர்ந்து பேசியதாவது:-

நபிகளாரின் வாழ்க்கை பூரணத்துவமானது வாழ்முறையின் பிரகாரமே உபதேசமும் செய்தார்கள். அந்த வாழ்க்கை முறை தற்போது புறக்கணிக்கப்படுவதால் மனித சமுதாயம் நிம்மதியை இழந்துள்ளது.

நபியவர்கள் சகல விடயங்களிலும் ஒரு முன்மாதிரியாகக் காணப்பட்டார்கள். ஏனைய சமூகத்தவர்களை மதித்து நடந்தார்கள். அதன் மூலம் சிறந்த பண்புகளை விட்டுச் சென்றார்கள்.

மௌலவிமார்களான கே.அப்துல் ஹலீம், எம்.சி.அப்துல் மஜீது, ஏ.எல்.ஏ.றம்ஸி ஆகியோரும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

# அங்கத்துவம் இன்றேல் மீண்டும் பதவி ஏற்பேன்

## -ஹிஸ்புல்லாஹ்-

(நமது நிருபர்)

எதிர்வரும் 30ம் திகதிக்கு இடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பையும் தன்னையும் இணைத்துக் கொள்ளாவிடில் மீண்டும் தான் ராஜினாமா செய்து நீர் வழங்கல் வடிகால் அபிவிருத்தி சபைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளப்போவதாக முன்னாள் பிரதியமைச்சரும் நீர்வழங்கல் அபிவிருத்தி சபைத் தலைவருமான எம்.ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

ஞாயிறு இரவு காத்தான்குடி மத்திய கலாசார நிலையத்தில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தெரிவித்துள்ளார்.

# புதிய இயக்குனர் சபை பதவியேற்பு

(காரைதீவு நிருபர்)

கல்முனை ப.நோ.கூ. சங்கத் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய இயக்குனர் சபை கடந்த புதனன்று வைபவ ரீதியாக பதவிகளைப் பொறுப்பேற்றது.

முன்னதாக, புதிய தலைவர் எம்.எம்.இஸ்மாயில் மற்றும் சக இயக்குனர் சபையினர் மாலை சூட்டப்பட்டு பட்டாசு வெடிகளுக்கு மத்தியில் கல்முனை நகர மத்தியூ வீதியூடாக வரவேற்கப்பட்டனர்.

ஊர்வலத்தில் இஸ்மாயில் மாஸ்டரின் ஆதரவாளர்கள் அதிகளவில் கலந்து கொண்டு மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

பின்பு கல்முனை ப.நோ.கூ. சங்கத்தில் பதவியேற்பு வைபவம் புதிய தலைவர் எம்.எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. வைபவத்தில் முன்னாள் தலைவரும், பிரதேச செயலாளருமான ஏ.எல்.ஐ.பளீல், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான எஸ்.கே.ஆனந்தராஜா, வி.அரசரெட்ணம், கூட்டுறவு தலைமைப் பரிசோதகர் வி.குலசேகரம், முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் வண.சகோ.எஸ்.ஏ.ஐ.மத்தியூ ஆகியோர் சமூகமளித்தனர்.

புதிய நிருவாக சபை திறம்பட இயங்கும் என்று பலரும் நம்பிக்கை தெரிவித்துப் பேசினர். தலைவர் இஸ்மயில் தம்மைத் தெரிவு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

# சர்வதேச பல்மருத்துவ கருத்தரங்கு

(காரைதீவு நிருபர்)

சர்வதேச பல் மருத்துவ கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளி, சனியிலும் ஜூலை முதலாம் திகதியும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பல் மருத்துவ சங்கம் தனது 69வது வருடாந்த மாநாட்டையும் எதிர்வரும் 30 ஆந் திகதி இக் கருத்தரங்கின் போது நடாத்தவுள்ளது.

அடுத்த தசாப்த காலத்தில் வாய் மூல சுகாதார அபிவிருத்தி" என்பது மேற்படி சர்வதேச கருத்தரங்கின் தொனிப்பொருளாகும், என்று ஏற்பாட்டாளர் டாக்டர்.மல்காந்தி கூறினார்.

பல்மருத்துவத்தில் புதிய தொழிநுட்ப அறிமுகம் தொடர்பாக பிரபல பல வைத்திய நிபுணர் ஹார்ஷா டி சில்வா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

கிராமப் புறங்களிலும், பாடசாலைகளிலும் பல் சுகாதார நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்ய சுகாதார அமைச்சு திட்டமிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த உற்சவம்

ஆரையம்பதி ஸ்ரீ செங்குந்தர் வீதி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 8 நாட்கள் இடம்பெற்று 05.ஆந் திகதி வியாழனன்று நீராவியல் கும்பம் சொரிதலுடன் நிறைவுறுகின்றது.

வழமைபோல் இம்முறையும் அம்பாள் தேர், கப்பல் என்பனவற்றில் எழுந்தருளி வீதியுலா வரும் நிகழ்வுகள் முறையே ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இடம்பெறவுள்ளது. கிழக்கிலங்கையில் அம்பாள் தேர், கப்பல் என்பவற்றில் பவனி வரும் சிறப்பு விழாக்கள் இடம் பெறுகின்ற ஒரே ஓர் ஆலயம் இதுவாகும். உற்சவகாலங்களில் சைவப் பெரியார்களின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய நிருவாகத்தினர் தெரிவித்தனர்.

# அன்னதானம் வழங்கும் வைபோகம்

ஆரையம்பதி ஆதிவைரவர் ஆலய வருடாந்த மகா உற்சவத்தின் இறுதி நாளாகிய நாளை உற்சவத்தின் பின் அன்னதானம் வழங்கப்படும்.

வழமை போல் 5 நாட்கள் இடம்பெறும் இவ் உற்சவத்தின் போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

# பன்றி வளர்ப்போருக்கு அறிவுறுத்தல்

(அரியம்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பன்றி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்கள் தமது விபரங்களை அண்மையில் உள்ள கால் நடை வைத்திய அலுவலகங்களில் ஒப்படைக்கும்படி கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் தென் பிராந்திய உதவிப் பணிப்பாளர் டாக்டர் கே.சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பன்றி வளர்ப்பு பண்ணைகளில் அக்கம் பக்கங்களில் நீர் தேக்கங்களில் காணப்படும் நுளம்புகள், பன்றிகளில் இரத்தம் குடித்த பின் மனிதர்களை குத்தும் போது ஒரு விதமான மூளைக் காய்ச்சல் நோய் பரவும் அபாயம் ஏற்படுதவதினால் நுளம்புப் பெருக்கத்தை தடுக்கும் நடவடிக்கையில் அதிகாரிகளுக்கு பன்றி வளர்க்கும் பண்ணையாளர்களின் விபரங்களை அனுப்புவதற்காகவே இவ்வாறு பன்றி வளர்ப்போர் விபரம் சேகரிக்கப்படுவதாக கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பன்றிகள் வளர்க்கும் பண்ணையர்கள் தமது பண்ணைகளை துப்பரவாகவும், நீர்த்தேக்கமின்றியும் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் கால்நடை வைத்தியர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

# நாக தம்பிரான் திருக்கதவு

(பழுகாமம் நிருபர்)

திருப்பழுகாமம் வேம்படி நாகதம்பிரான் ஆலயத்தின் திருக்கதவு திறத்தல் நிகழ்வு 25.ஆந் திகதி நடைபெற்றது. திருவிழா நிகழ்வுகளின் போது பஜனை வழிபாடுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் 29.ஆந் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் நிகழ்வு இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இன்று நடைபெறும் கவியரங்கு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு திராய்மடு ஸ்ரீ வீரபத்தினியம்மன் ஆலயத்தில் இன்று இடம்பெறும் சடங்கு வைபவத்தின் போது நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் கவியரங்கமும் இடம் பெறுகிறது.

இக்கவியரங்கை ஈழத்தின் பிரபல கவிஞரும், எழுத்தாளருமான செ.குணரெத்தினம் (அமிர்தகழியான்) தலைமை தாங்கி நடாத்தவுள்ளார்.

"நாளை விடியுமா நமக்கு?" எனும் தலைப்பிலான இக் கவியரங்கில் பிரபல கவிஞர்களான காரைதீவு பொன் சிவானந்தன், மண்டூர்த்தேசிகன், ராஜ துரை ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் என திராய்மடு இந்து சமய அபிவிருத்தி மன்றத்தினர் தெரிவிக்கின்றார்கள்.

# தமிழ் பத்திரிகையாளர்களே இங்கு இல்லை என்று கூறுவதற்கு இந்த பௌஸர் யார்?

இரா.துரைரத்தினம்

கருத்துச்சுதந்திரம் என்பதற்காக பொது இடமொன்றில் எதையும் கூறிவிடலாம் என சிலர் நினைக்கிறார்கள். அத்தகைய ஒரு பேச்சுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பில் காணமுடிந்தது.

கிழக்கு பல்கலைக்கழக நூலகவாரத்தை முன்னிட்டு நுண்கலைப்பிரிவினர் எழுத்தாளர் சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

அங்கு பேசப்பட்ட விடயங்களில் பத்திரிகையாளர்கள் பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பாக இங்கு சில விடயங்களை குறிப்பிடுவதுடன் இது பற்றி ஏற்பாட்டாளர்களிடமும், அங்கு கருத்துக்கூறியவர்களிடமும் சில கேள்விகளை முன் வைக்கிறேன்.

## திட்டமிட்ட விஷமங்களா?

இந்த சந்திப்பிற்கு நுண்கலைப்பிரிவு தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமைதாங்கினார்.

இந்த சந்திப்பிற்கு 40 பேருக்கு அழைப்பு விடுத்ததாகவும் எழுத்தாளர் அறிமுகம், எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வது இச்சந்திப்பின் நோக்கம் என பேராசிரியர் மௌனகுரு தனது தலைமையுரையில் கூறினார்.

இந்த 40பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களா அல்லது இலங்கை முழுவதையும் சேர்ந்தவர்களா என்பது தெரியவில்லை. மட்டக்களப்பில் பலர் அழைக்கப்படவில்லை. முக்கியமாக கிழக்கிலிருந்து வெளிவரும் தினசரியான தினக்கதிருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என அதன் ஆசிரியபீடம் தெரிவித்திருக்கும் அதேவேளை கொழும்பிலிருந்து வந்த சிலரும் கலந்து கொண்டனர். எந்த அடிப்படையில் இந்த அழைப்புக்கள் விடுக்கப்பட்டது என்பது நுண்கலைத்துறையினருக்குத்தான் வெளிச்சம். இந்த அழைப்பு ஒரு பெரிய விடயமாக ஆரம்பத்தில் நான் கருதவில்லை. கொழும்பிலிருந்து வந்த சிலர் தெரிவித்த கருத்தைப்பார்க்கும் போது இதிலும் திட்டமிட்ட விசமங்கள் ஏதாவது இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

சமூகமளித்தவர்கள் தங்களை அறிமுகம் செய்துவிட்டு எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கிழக்கு பல்கலைக்கழகம் இதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது பற்றியும் கூறுமாறு கேட்டுக்கொண்ட பேராசிரியர் மௌனகுரு கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 10வருட காலத்தில் கலைப்பிரிவை கட்டி எழுப்புவதற்கு தாம் பட்ட கஷ்டங்களை கூறினார். கல்லில் நார் உரிப்பதைப்போல் நிர்வாகத்திலிருந்து கலைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகளை பெற முடிந்ததாகவும், மட்டக்களப்பு நகரில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான இரு அறைகளில் கலைப்பிரிவை ஆரம்பித்து இன்று குளிரூட்டப்பட்ட நுண்கலைக்கூடத்தில் இருந்து பேசுவதையிட்டு பெருமிதமடை ருக்கிறோம் என சொன்னார்.

எழுத்தாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்று அவர்களின் வெளியீடுகளை சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாக சித்தி அமரசிங்கம் கூறிய போது எஸ்.எல்.எம்.ஹனிபா தனது கருத்தை கூற ஆரம்பித்தார்.

ஹனிபா தனக்கே உரித்தான நகைச்சுவையுடன் எழுத்தாளர்கள் என தங்களை அறிமுகப்படுத்தி விட்டு இருந்த அனைவரின் தலையிலும் ஒரு குண்டைத்தூக்கிப்போட்டார்.

தமிழகத்துடன் ஒப்பிடும் போது இங்கு எழுத்தாளர்களே இல்லை என்றுதான் சொல்வேன். இங்கு வெளிவந்த சிறுகதைகளில் ஓரளவு பேசப்படுவது என்னுடைய ஒருசில சிறுகதைகளும், உமாவரதராஜனுடைய சிறுகதை ஒருசிலவும்தான்.

வ.அ.இராசரத்தினத்தைக்கூட நான் சிறந்த ஒரு எழுத்தாளன் என்று கூறமாட்டேன். கடந்த 20 ஆண்டுகளாக இந்த மண்ணில் நடக்கும் நிகழ்வுகள், மக்களின் வாழ்வு, அவர்களின் அவலங்கள், பிரச்சினைகள், அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் ஏதாவது ஒரு சிறுகதை வந்திருக்கிறதா? நாவல் வந்திருக்கிறதா? இந்த மண்ணின் அவலத்தை தத்துரூபமாக தந்திருக்கிறேன் என யாராவது ஒருவரால் இங்கு கூறமுடியுமா? அப்படி இருக்க யாரை எழுத்தாளர் என்று கூறமுடியும் என ஹனிபா கூறிய போது தமக்குள் சிலர் முணுமுணுத்துக்கொண்டார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து எழுத்தாளர்களை அழைத்துவந்து இங்குள்ளவர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்ற ஆலோசனையையும் ஹனிபா முன்வைத்தார்.

அழகுதமிழை ஆங்கில தமிழாக்கி எதிர்கால சந்ததி தமிழையே மறந்து போக செய்யும் அளவிற்கு தமிழ்பணிபுரிந்து வரும் தமிழ்நாட்டுக்காரர்களை ஹனிபா ஏன் தலையில் தூக்கி கொண்டாடுகிறார் ?

இங்கு எழுத்தாளர்களே இல்லை என ஹனிபா கூறிய போது கொழும்பிலிருந்து வந்திருந்த பௌசர் இங்கு பத்திரிகையாளர்களும் இல்லை என்றார். பௌசர் மூன்று விடயங்களை குறிப்பிட்டார்.

1. இங்கு தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை.
2. இங்கிருப்பவர்கள் அரசியல்வாதிகளின் பேச்சுக்களை மட்டும் அறிக்கை இடுபவர்கள்
3. அண்மையில் விருது பெற்ற நடேசன் ஒரு பத்திரிகையாளர் அல்ல. அவருக்கு வழங்கப்பட்ட விருது எனக்கு உடன்பாடானதல்ல. அவர் அண்மையில் வெளியிட்ட நூலும் விமர்சனத்திற்கு உரியது.

இந்த மூன்று விடயங்களையும் கூறிய பௌசர் பற்றி வாசகர் பலருக்கு தெரியாமல் இருக்கலாம். எனவே அவரைப்பற்றி நான் கூறவேண்டியது அவசியமாகும்.

## யார் இந்த பௌசர்?

ஈ.பி.டி.பி இயக்கத்தைச் சார்ந்திருந்த இவர் அக்கரைப்பற்றிலிருந்து கடந்த சில வருடங்களுக்கு முதல் ஈஸ்ரன் ரைம்ஸ் என்ற ஆங்கிலபெயரில் தமிழ் பத்திரிகை ஒன்றினை சிலவாரங்கள் வெளியிட்டவர். அப்போது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசையும், அதன் தலைவர் அஷ்ரப்பையும் விமர்சித்து வந்தவர். பின்னர் அப்பத்திரிகை வெளியீட்டை கைவிட்டு அமைச்சர் அஷ்ரப்புடன் இணைந்து கொண்டார். இப்பொழுது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஷ், தேசிய ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தராக செயற்படுபவர். மூன்றாவது மனிதன் என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறார். புத்தகக்கடை ஒன்றை நடத்திவருவதாகவும் கேள்வி. கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடந்த நூல் கண்காட்சியில் புத்தக விற்பனை நிலையம் ஒன்றை திறந்திருந்தார். இந்திய நாணயம் 100 ரூபா விலையுடைய புத்தகத்தை இங்கு 350 ரூபாவுக்கு விற்பனை செய்தார். (மட்டக்களப்பு மக்களுக்கு இந்திய நாணய பெறுமதி தெரியாது என்ற நினைப்போ தெரியவில்லை)

பௌசர் கூறிய மூன்று விடயங்களுக்கும் அங்கு உடனடியாக நான் ஏன் பதிலளிக்கவில்லை என நீங்கள் கேட்கலாம். அந்த கலந்துரையாடலின் தலைப்பு எழுத்தாளர்களும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் என்பதாகும். அந்த தலைப்பிற்கு தொடர்பில்லாத விடயம் பற்றி பேசுவதும் அதற்கு பதிலளிப்பதும் கலந்துரையாடலை குழப்பும் செயலாக அமைந்துவிடும்.

எனவேதான் பௌசர் கூறிய மூன்று விடயங்கள் தொடர்பாக அவரிடமும் அவரின் கருத்தை ஆதரிப்பவர்களிடமும் சில கேள்விகளை இங்கு கேட்க விரும்புகிறேன்.

இங்கு தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை என கூறியது மட்டக்களப்பை குறிப்பிடவில்லை என்றும், இலங்கை முழுவதையும் குறிக்கும் வகையிலேயே இங்கு தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை என தான் கூறியதாக பின்னர் தினக்கதிர் அலுவலகத்தில் வைத்து அவர், தெரிவித்தார்.

எந்த அளவுகோலை வைத்து இலங்கையில் தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை என பௌசர் கூறினார்?

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களே இல்லை என கூறும் அளவிற்கு அதிஉயர் மேதாவியாக உயர்ந்திருக்கும் பௌசர் எத்தனை தினசரிகளுக்கு பிரதம ஆசிரியராக இருந்திருக்கிறார். இலங்கை தமிழ் பத்திரிகை துறையில் என்னென்ன சாதனைகளை படைத்திருக்கிறார்.

இலங்கையில் தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லாமல் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய இடங்களில் ஏழு தமிழ் தினசரிப்பத்திரிகைகள் வெளிவருவதெப்படி? பத்திரிகையாளர்களின் தரத்தை கணிப்பிடும் உயர்ந்த நிலையில் இருக்கும் பௌசர் இதற்கு சுலபமாக பதிலளிப்பார் என நினைக்கிறேன்.

> **கருத்தரங்கு**
>
> **இது உங்கள் பக்கம்**
>
> மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர்பார்க்கும் தேவைகள். அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விடயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.
>
> **ஆசிரியர்**

இரண்டாவது விடயம் இங்கு இருப்பவர்கள் அரசியல்வாதிகளின் பேச்சுக்களை மட்டும் அறிக்கை இடுபவர்கள் என்பதாகும்.

மட்டக்களப்பில் இருக்கும் எந்த ஒரு தமிழ் பத்திரிகையாளரும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்பவர் அல்ல. (நான் இங்கு குறிப்பிடுவது தமிழ் இனத்தைச்சேர்ந்த பத்திரிகையாளர்களை மட்டுமே) அவர்கள் அரசியல்வாதிகளின் சலுகையில் ஒட்டி வாழ்பவர்களும் அல்ல. அப்படி யாராவது ஒரு தமிழர் இருந்தால் எந்த அரசியல்வாதிக்குப்பின்னால் யார் ஒட்டியிருக்கிறார்கள் என்ற விபரத்தை பௌசர் வெளியிட வேண்டும். இங்குள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் பலர் தாம்வாழும் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றியும், மறைக்கப்பட்ட பல உண்மைகளையும் அம்பலப்படுத்தியதை பௌசர் அறியவில்லையா? அல்லது அவரின் அரசியல் பின்னணி காரணமாக அதை ஏற்க மறுக்கிறாரா? அவர் தான் பதிலளிக்க வேண்டும்.

மூன்றாவது விடயம் நடேசன் பத்திரிகையாளர் இல்லை என்பதும். அவருக்கு வழங்கப்பட்ட விருது தமக்கு உடன்பாடு இல்லை என்பதும்.

பௌசரின் உடன்பாடு பெற்று விருது வழங்கவேண்டும் என்ற சட்டத்தை உருவாக்கியவர் யார்? அது எப்போது உருவாக்கப்பட்டது என்பதையும் அவர் கூற வேண்டும்.

## விருது பற்றி விமர்சிக்க இவருக்கு என்ன அருகதை

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் வழங்கிய விருது பற்றி விமர்சிக்கும் அருகதை நிச்சயமாக பௌசருக்கு இல்லை என்பதை அழுத்தம்திருத்தமாக கூறிவைக்கவிரும்புகிறேன்.

இங்கு தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை, நடேசன் பத்திரிகையாளர் இல்லை என்ற கருத்து திடீரென அந்த சந்தர்ப்பத்தில் கூறிய கருத்து என்று எடுக்கமுடியாது. திட்டமிட்ட ரீதியில் ஏற்கனவே ஒத்திகைபார்த்து கூறப்பட்ட கருத்து என்பதை பௌசர் மற்றும் அவரைச்சார்ந்தவர்களின் அரசியல் பின்னணிகளை ஆராயும் போது புரியவரும்.

மட்டக்களப்பு உட்பட வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் தமிழ் தேசியம் தொடர்பாக அக்கறையோடு செயற்பட்டு வரும் அதேவேளை தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறைகளை, அவலங்களை. மனிதஉரிமைமீறல்களை அம்பலப்படுத்தி வருகிறார்கள். இதைப்பொறுக்கமுடியாத பேரினவாத சக்திகளும் அவர்களின் கைக்கூலிகளும் தமிழ் பத்திரிகையாளர்களைப் பார்த்து புலிகளின் உளவாளிகள் என கூறுவதும், தமிழ் பத்திரிகையாளர்கள் என யாரும் இல்லை என கூறுவதும் வழக்கமாகிவிட்டது

## புலிகளின் உளவாளிகள் என்ற பிரசாரத்தின் நோக்கம்

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தன்மையையும், தமிழ் சமூகத்தின் மீது நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்திய துமா பொன்னையா, மயில்வாகனம் நிமலராஜன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் புலிகளின் உளவாளிகள் என குற்றம்சாட்டப்பட்டிருந்தனர். இப்போது பத்திரிகையாளர் சிவராம் புலிகளின் உளவாளி என திட்டமிட்ட ரீதியில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் அவருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் ஒரு தொடர்ச்சியாகவே தமிழ் சமூகத்தின் நலன்கள், தேசிய விடுதலை, என தமது எழுத்தை ஆழமாக பதித்து வரும் தமிழ் பத்திரிகையாளர்கள் யாருமே பத்திரிகையாளர்கள் இல்லை என பௌசர் கூறியிருக்கிறார்.

இந்த பின்னணிகளைப் பார்க்கும் போது பௌசர் போன்றவர்கள் நுண்கலைத்துறையினரால் கொழும்பிலிருந்து இங்கு ஏன் அழைக்கப்பட்டார்கள். தமிழ் பத்திரிகையாளர்களுக்கு எதிரான பிரசாரத்திற்கும் நுண்கலைத்துறையினருக்கும் தொடர்பு இருக்கிறதா என்ற சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இதற்கு ஏற்பாட்டாளர்கள் தான் பதிலளிக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் நியாயபூர்வமான உரிமைகளை மறுத்து தமிழ் மக்களுக்கு எதிரான போரை நடத்திவருபவர்களின் அரசியல் பின்னணியைக் கொண்டவர்கள் தமிழ் பத்திரிகையாளர்களைப்பார்த்து புலிகளின் உளவாளிகள் என்றும், பத்திரிகையாளர்கள் இல்லை என்றும்தான் சொல்வார்கள்.

## விளையாட்டுச் செய்திகள்

# திருமலை வீரர் முருகதாஸ் வெண்கலப் பதக்கம் பெற்றார்

வென்னப்புவவில் இம் மாதம் 16 ஆம் திகதி விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட 27 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வேக நடைப் போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் சார்பில் பங்குபற்றிய வீரர்களில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வி.முருகதாஸ் மூன்றாவதாக வந்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.



வேக நடைப் போட்டியில் 20 கிலோ மீற்றர் தூரத்தை இவர் இரண்டு மணித்தியாலங்கள் 9 நிமிடங்கள் 18 செக்கன்களில் நடந்து முடித்தார்.

முதலாவது இரண்டாவது இடங்களை மத்திய மகாணத்தைச் சேர்ந்த வீரர்களான எம்.டி.நிமால், ஏ.ஜே.வீரசூரிய ஆகியோர் முறையே 2 மணித்தியாலயங்கள் 7 நிமிடங்கள் 58 செக்கன்கள், 2 மணித்தியாலங்கள் 8 நிமிடங்கள் 39 செக்கன்கள். நேரத்தில் நடந்து முடித்தனர்.

முருகதாஸ் ஜூலை 20 ஆம் திகதி இலங்கை அமைச்சு மெய்வல்லுனர் சங்கத்தால் நடாத்தப்படவிருக்கும் 29 கிலோ மீற்றர் வேக நடைப் போட்டியில் பங்குபற்றவிருக்கின்றார். எதிர்வரும் அக்டோபர் மாதம் மலேசியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேசப் போட்டியில் (24 மணிநேரம் தொடர்ந்து நடத்தல்) பங்குபற்ற இருப்பதாக முருகதாஸ் தெரிவித்தார்.

``எனது ஒரே குறிக்கோள் 2002 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆசியாக் கண்டத்திலுள்ள 43 நாடுகள் பங்குபற்றும் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுவதேயாகும்'' என்று கூறும் முருகதாஸ் கடந்த நான்கு வருடங்களாக திருமலை விளையாட்டு அதிகாரி சண்முகநாதன் விஜயநீதனிடம் பயிற்சி பெற்று வருகிறார்.

விஜயநீதனின் முறையான பயிற்சியும், அவர் அளித்த ஊக்கமுமே எனக்கு வெண்கலப் பதக்கத்தை கிடைக்க வைத்தது என்றார் முருகதாஸ்.

## கராட்டிப் போட்டியில் வெற்றி

(சாய்ந்தமருது நிருபர் எம்.கரீம்.எம்.றபீக்)

ஸ்ரீலங்கா கராட்டி சம்மேளனம் வடகிழக்கு மாகாண ரீதியில் சமீபத்தில் கல்முனை நகர மண்டபத்தில் நடாத்திய கராட்டிப் போட்டியில் ஆண்கள் கறுப்புப் பட்டி 65 கிலோ பிரிவில் தனிநபர் சண்டையிடுதல் போட்டியில் பங்குபற்றி முதல் இடத்தையும், குழு நடா போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமது மாஹிர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நற்பிட்டிமுனையை சேர்ந்த இவர் ஜப்பான் ``கராட்டே டோ மருபோசிக்காய்'' சங்கத்தின் அங்கத்தவரும், கல்விக் கல்லூரி கராட்டிக் குழுவின் தலைவருமாவார்.

## ஸிம்பாப்வேயை இந்தியா ஒன்பது விக்கட்டுக்களால் வென்றது

(ஹராரே)

ஹராரேயில் 24.06.2001 அன்று நடந்த மூன்று நாடுகளின் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி சிம்பாபே அணியை ஒன்பது விக்கட் வித்தியாசத்தில் வென்றுள்ளது.

வெற்றி பெறுவதற்கு 34 ரன்கள் எடுக்க வேண்டியிருந்த இந்தியா 26.2 ஓவர்களிலேயே 137 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. கங்குலி இரண்டு ரன்களிலேயே ஆட்டமிழந்தாலும் 70 பந்துக்களில் 70 ரன்கள் அடித்த சச்சின் டெண்டுல்கர் இந்திய வெற்றிக்கு வழிசமைத்துக் கொடுத்தார்.

# முக்கோண ஒருநாள் டெஸ்ட் தொடர்கள் ஜூலை 18ம் திகதி ஆரம்பம்

இலங்கை, இந்திய, நியூசிலாந்து ஆகிய அணிகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் தொடர் போட்டிகள் ஜூலை 18ம் திகதி ஆரம்பமாக உள்ளது. ஆகஸ்து மாதம் 5ம் திகதி இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. இத் தொடரில் மொத்தமாக 10 ஆட்டங்கள் நடை பெறவுள்ளதுடன் நான்கு ஆட்டங்கள் இரவு, பகல் ஆட்டங்களாகவும், ஏனைய 6 போட்டிகளும் பகல் ஆட்டங்களாகவும் ஆடப்பட வுள்ளன.

இதன் பின் இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ஆகஸ்து 14ம் திகதி ஆரம்பமாகி செப்தம்பர் 2ம் திகதி நிறைவு பெறவுள்ளது.

முக்கோண ஒருநாள் தொடர் மற்றும் டெஸ்ட் தொடர் ஆகியவற்றை எந்தவித தடைகளுமின்றி நேரடியாக ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் தேசிய தொலைக்காட்சியின் 'ஐ' அலைவரிசையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகல ஆட்டங்களும் தங்கு தடைகளின்றி 'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பப்படவுள்ளதாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜெனரல் ஜீ.என் மீகஸ்வத்தை தெரிவித்தார்.

இவ்விரு தொடர்களையும் ஒளிபரப்புவதற்கான உரிமை 'ஐ' அலைவரிசைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த சகல ஆட்டங்களும் வேர்ல்ட் ஸ்போர்ட் நிறுவனத்தினால் உலகெங்கும் ஒளிபரப்பப்படவுள்ளதுடன், இலங்கையில் 'ஐ' அலைவரிசைக்கு இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இவ்விரு போட்டித் தொடர்களை ஒளிபரப்புவதற்கான உரிமை தற்போது 'ஐ' அலைவரிசைக்கு வழங்கபட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய கிரிக்கெட் இடைக்கால குழுவின் விற்பனைப் பணிப்பாளர் ஜயந்த குடாஹெட்டி அடுத்த இரு வருடங்களுக்குள் கிரிக்கெட் ஆட்டங்களை ஒளிபரப்புவதற்கான உரிமையை வழங்கும் வகையில் தேசிய தொலைக்காட்சியுடன் ஒப்பந்தமொன்றினை செய்துகொள்ள உத்தேசித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். முக்கோண ஒருநாள் தொடர் டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் உள்நாட்டு, சர்வதேச கிரிக்கெட் துறை அறிவிப்பாளர்கள் நேர்முக வர்ணனைகளை வழங்கவுள்ளனர். ரஞ்சன்மடுகல்ல, ரஞ்சித் பெர்னாண்டோ, ரனில் அபேநாயக்க ரோசான் மகாநாம, மார்டின் குரோ, ரவி சாஸ்திரி டோனி கிரேக், நவ்ஜோத் சிங், சிது, பரி ரிசட்ஸ் ஆகியோர் நேர்முக வர்ணனை வழங்கவுள்ளனர்.

## மாகாணப் போட்டிக்குத் தெரிவு

அண்மையில் சித்தாண்டி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் புனித மிக்கேல் தேசிய பாடசாலையைச் சேர்ந்த விவாத அணி (திறந்தபோட்டி) முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இக்குழுவில் சுவாகரன், சி.ஜெயன் பார்த்தசாரதி, சசதுவர்த்தனன். ஆகிய மாணவர்கள் பங்குபற்றினர். இவர்களை கல்லூரி தமிழ் ஆசிரியை செல்வி மனோன்மணி மீனா மீனாம்பிகை வழி நடத்தினார். புனித மிக்கேல் கல்லூரி மாவட்ட மட்டத்தில் 6 முதலிடங்களைப் பெற்று மாகாணப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது

## வாசகர் நெஞ்சம்

### மனதில் நிலைத்துவிட்ட நூலக வாரம்

கடந்த வாரம் 22,23,24ம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக் கழக நூலகத்தினால் நூலக வாரம் கொண்டாடப்பட்டது. வாசகர்கள் அறிந்ததே. இந்த நிகழ்வு மட்டக்களப்பு வாழ் ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் கவர்ந்திருந்தது. தமக்குப் பொருத்தமான நூல்களை இனங்காணவும், தெரிவு செய்யவும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியது.

``வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்'' என்பது பழைய வாக்கியம். உளவியல் ரீதியாக பார்ப்பின், வாசிப்பின் போது மனம் ஒழுங்குபடும். மனச்சோர்வு, மனஅழுத்தம் என்பனவற்றிலிருந்து வாசிப்பு மனிதனை மீட்டெடுக்க உதவும். இன்று பொதுவாக இப்பழக்கம் அருகி வருவதாக அறிஞர்களால் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த தகவல் தொழிநுட்ப யுகத்தில் நூல்கள் தம் நிலையை இழக்காதுள்ளது என்பதும் அவதானிக்கப்படக்கூடியதே.

இவ்வருடம் நடந்த இப்புத்தகக் கண்காட்சி எமது மாணவரிடமும், ஆசிரியர்களிடையேயும் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ச் செய்து ஊக்குவிக்கும் என நம்புகிறேன். இதுபோன்ற ஒரு நிகழ்வை பலத்த சிரமத்தின் பேயும் இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் ஒழுங்குசெய்த நூலகர் திருமதி தவமணி அருந்ததியும் நூலக உத்தியோகத்தர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

**வாசுகி சிவலிங்கம்,**
**மெய்யியற் துறை விரிவுரையாளர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

### ஆளணி பற்றாக்குறை பற்றிய முறைப்பாடு

எனது சகோதரியின் வயிற்றில் நடத்த இருந்த சத்திர சிகிச்சைக்கு உடனடியாக 'ஏ' நெக்கற்றிவ் குருதி வகை தேவைப்பட்டதாலும், மேற்படி வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குறிப்பிட்ட இரத்தவகை இருப்பில் இல்லை என அறிவிக்கப்பட்டமையினாலும், எனது இரத்த வகை ஒத்திருந்தமையினால் உடனே நான் இரத்த வங்கிப் பகுதிக்குச் சென்று அங்கு கடமையிலிருந்த தாதியிடம் முழு விபரத்தையும் கூறி எனது இரத்தத்தை எடுக்கும்படி கூறினேன்.

அதற்கு மேற்படி தாதி தனக்கு நேரம் இல்லை என்றும், தனக்குப் பிறகு வரும் தாதியிடம் பி.ப.2.00 மணியளவில் தொடர்பு கொள்ளும் படியும் அப்படி இல்லாவிட்டால் இந்த ஆட்கள் பற்றாக்குறை என்று எங்காவது முறையிடும்படியும் நேரடியாக என்னிடம் சொன்னார். இதை வைத்திய அதிகாரியிடம் தெரிவித்திருக்கிறேன். அவர் இதற்கான நடவடிக்கையை எடுப்பார் என்று நம்புகிறேன்.

**அ.சுதாகரன்**
**ஆட்டோ சாரதி**
**மட்டக்களப்பு.**

### வடியைத் தடுக்காத அதிகாரிகள்

மட்டுநகர் மாநகரப் பகுதியில் வடிசாரயம் குடிப்பவர்களும், வடிப்பவர்களும் அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இருதயபுரம் பகுதியில் சர்வ சாதாரணமாக வடிசாராயம் காய்ச்சும் தொழிலில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு மறைமுகமாக சில அரச கிராம உத்தியோகத்தர்கள் துணை போகின்றனர். இப்பகுதி கிராம உத்தியோகத்தரின் வீட்டிற்குப் பக்கத்திலும் வடி சாராயம் வடிப்பதை இவர்கள் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இதையிட்டு தகுதி வாய்ந்த அதிகாரிகள், கிராமநலன் விரும்பிகள் அக்கறை எடுக்க வேண்டும் என தினக்கதிர் மூலமாகக் கேட்கிறோம்.

**ச.சசிகுமார்**
**இருதயபுரம்.**

### தேர்தல் கடமைக்கான கொடுப்பனவு எப்போது?

சீ.புவனேந்திரன் ஆகிய நான் மட்/சாகிரா வித்தியாலயத்தின் வாக்குச் சாவடியில் பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது கூலி வேலைகளை கடந்த 09.10.2000ந் திகதியும் 10.10.2000ந் திகதியும் இருதயபுரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அவர்களுக்குச் செய்து கொடுத்தேன்.

ஆனால் எனக்குரிய கூலி இன்று வரைக்கும் அவர் தரவில்லை. மேல் அதிகாரிகளுக்கு முறையிட்டும் இதுவரைக்கும் பணம் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆகையினால் தேர்தல் அதிகாரிகள் உட்பட சகல உயர் அதிகாரிகளும், பக்கசார்பற்ற விசாரணை செய்து எனக்குரிய கூலிப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

**சீ.புவனேந்திரன்**
**சாகிரா அகதிமுகாம்**
**மட்டக்கப்பு**

# 'ஏமாற்றும் அரசுகளுக்கு பாடம் புகட்டவே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு'

## கூட்டணி எம்.பி. ஜோசப்

(மட்டக்களப்பு)

**கடந்த காலங்களில் மாறிமாறி ஆட்சி செய்து வந்த பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்காது ஏமாற்றிவந்துள்ளன. இப்படி ஏமாற்றுகின்ற அரசுகள் இனிமேல் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுவதற்கே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க முன்வந்தோம். என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு தன்னாமுனை புனிதவளனார் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நேற்று பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் நோர்வேயின் சமாதான முயற்சிகள் முன்னேற்றம் ஏற்பட்டு வந்த வேளையில் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மை தூக்கி எறிந்ததன் மூலம் சந்திரிக்கா அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாக கூறிவந்தது வெறும் ஏமாற்று வித்தை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

சந்திரிக்கா அரசு இதய சுத்தியுடன் சமாதான முயற்சியில் ஈடுபடாது யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கே முயற்சி செய்து வருகிறது.

### நம்பிக்கைஇழந்ததை உலகறியச் செய்ய

எனவே இந்த அரசின் மீது தமிழ் மக்கள் முழுமையாக நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பதை உலகறிய செய்வதே எமது நோக்கமாகும்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையற்றவர்கள் போரை விரும்புகின்றவர்கள் என்ற சில உலக நாடுகளின் அபிப்பிராயத்தை கடந்த 7 மாதங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகள் பொய்யாக்கியுள்ளனர்.

சமாதான முயற்சிகளை தொடர்ந்து ஆதரித்து வந்த விடுதலைப் புலிகள் அதற்கு எடுத்துக்காட்டாக 4 மாதகாலமாக ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டனர். அவர்களது நம்பகத் தன்மைக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் மதிப்பளிக்க அரசு தவறிவிட்டது.

அதற்கு மாறாக அரசு அதன் போர்க் கொள்கையை நிலைநாட்டப் படைகளை ஏவிவிட்டது. அரசு பேச்சுவார்த்தையில் நம்பிக்கை அற்ற நிலையையும், போரின் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதையும் காட்டிவருகிறது.

இதன் மூலம் அரசு தமிழ் மக்களை மட்டுமன்றி உலக நாடுகளையும் ஏமாற்றிவிட்டது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும். நோர்வேயின் சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராத அரசை பதவியிலிருந்து இறக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இன்று தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி வருபவர்கள் விடுதலைப் புலிகளே என்பதை இந்நாட்டு தமிழ் மக்கள் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே விடுதலைப் புலிகளின் கரத்தை பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழ் மக்களின் கடமையாகும்.

### அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுமா?

நம்பிக்கையில்லாப் பிரேரணையை விட தமிழ் மக்களின் இன்னல்களைப் போக்கக் கூடிய முக்கிய தினமாக எதிர் வரும் ஜூலை 6ம் திகதி கருதப்படுகிறது. அன்றைய தினம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இன்று அரசின் பக்கம் 109 பேரும் எதிர் கட்சியின் பக்கம் 115 பேரும் உள்ளனர். இதுவரை காலமும் ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி. தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியன அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்து வந்தன.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் அவசரகால விதிகள் நீக்கப்படும். விடுதலைப் புலிகள் மீதான தடை உட்பட பொருளாதார, மீன்பிடித் தடை, என்பன நீக்கப்படும் அவசரகால சட்டத்தின் மீதான கைதுகளை செய்யமுடியாது ஐக்கிய தேசிய கட்சிக்கு உண்மையில் தமிழ் மக்கள் மீது அக்கறை இருக்கிறதா என்பதை அன்றைய தினம் அறிந்து கொள்ள முடியும் என ஜோசப் பரராசசிங்கம் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலை அதிபர் எல். அலக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கோட்டக்கல்வி அதிகாரி கே.விஜயரெத்தினம் தன்னாமுனை பங்குத்தந்தை ரட்ணகுமார் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

# மலையகப்பெண் மீதான வல்லுறவுக்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கண்டனம்

(நமது நிருபர்)

மருதானைச் சந்தியில் வைத்து மலையகப்பெண் பொலிஸ் அதிகாரிகளால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தலைநகரில் தமிழ்ப்பெண்கள் தலை நிமிர்ந்து வாழமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது பொருளாதார கஷ்டம் தொழிலின்மை ஆகிய காரணங்களினால் மலையகப்பெண்கள் தலை நகருக்குத் தொழில் தேடிச் செல்கின்றனர் இவ்வாறு செல்லும் பெண்கள் மீது படையினர் மேற்கொள்ளும் பாலியல் வல்லுறவானது வெளியே பரிரைமேற்ந்த கதையாகி விட்டது.

எனவே இச்சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தவேண்டும் எனக்கேட்டுள்ளார்.

# வவுனியா மன்னாரில் ஏழு பேர் பற்றிய தகவல் இல்லை

(நமது நிருபர்)

மன்னாரிலும் வவுனியாவிலும் மூன்று சிறுமிகள் உட்பட ஏழு பேரைக் காணவில்லை என வவுனியா மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மன்னார் பிரஜைகள் குழு என்பவற்றில் முறையிடப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை பாடசாலைக்கு சென்ற மூன்று மாணவிகள் காணாமல் போயுள்ளனர் மாணவிகள் இதுவரை வீடு திரும்பாததைபடுத்து உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

மன்னார் வீதிப்பள்ளகாத்தான் கோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை டிலிசா (12), கிருஷ்ணபிள்ளை கிருபாளினி மற்றும் ஜெகநாதன் தர்ஷிகா (10) ஆகிய மூவருமே காணாமல் போனவர்களாவராகள்.

இம்மாதம் மன்னாரில் கைது செய்யப்பட்ட நால்வர் தொடர்பாகவும் தகவல்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ரவூப்ஹக்கீமை....

அஷ்ரப்பை அடுத்து முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவியை ஏற்கச் செய்தவற்கான நடவடிக்கைகளை ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நிந்தவூர்.....

ரிக்குள் புகுந்து மாணவர்களை அங்கிருந்து வெளியேற்றி பயண வசதிகள் செய்து தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அரபுக் கல்லூரியையும் இழுத்து மூடியது.

### மட்டக்களப்பு.....

செங்கலடி, பதுளை வீதிப்பகுதி வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளன.

விடுதலைப் புலிகளின் இந்த அறிவித்தல் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிசன மதிப்பீடு திருப்தி கரமாக நடத்த முடியாத நிலை உள்ளதாக பிரதேச செயலாளர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

### மருதானை பாலியல் ......

குசலா வீரவர்த்தன முன்னிலையில் திங்கட்கிழமை பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகள் முடிவடையாத காரணத்தினால் விளக்க மறியலில் வைக்கும் அனுமதியை வழங்குமாறு பொலிஸார் நீதிபதியை கேட்டுக் கொண்டதற்கிணங்க யூலை 6ம் திகதி வரை விளக்க மறியலில் வைப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

காமல் ஜோதிலக, ஜெயசிறி குமாரசுஜீவ நாணயக்கார ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

# கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் சர்வதேச சித்திரவதை தினம்

(அரியம்)

அனைத்துலக சித்திரவதை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு 'லயன்ஸ்' கழகத்தின் அனுசரணையுடன் கிழக்கிழங்கை செய்தியாளர் சங்கம் நடாத்தும் கருத்தரங்கு எதிர்வரும் 24ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மண்டபத்தில் கிழக் கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயலாளர் சண்.தவராசா தலைமையில் இடம் பெறும்.

இக் கருத்தரங்கில் சித்திரவதைகள் தொடர்பான ஐ. நாடு பிரகடணமும், இலங்கை நடைமுறைகளும் எனும் தலைப்பில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், சட்டத்தரணி கே.எஸ். பேரின்பராசா, கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவர் இரா துரைரட்னம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் த. வேதநாயகத்தின் நன்றியுரையுடன் இந்நிகழ்வு நிறைவு பெறும் அனைத்துப் பொது மக்களும் கலந்து கொள்ளுமாறு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### தற்போதைய.......

க்ஷ, எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் அடங்குகின்றனர்.

இதே சமயம் பிரசாரம் ஊடகக் கண்காணிப்பு ஆகியவற்றிற்காக சரத் அமுனுகம, மங்கள சமரவீர, அனுரா பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் நடவடிக்கையை கண்காணிக்கும் பணி பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### கண்டெடுத்த அடையாள அட்டைகள்

வாழைச்சேனையைச் சேர்ந்த சந்திரபாலன் சுஜீவன் என்பவருடைய அறிமுக அட்டை தினக்கதிர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

தன்னாமுனை புனித வளனார் வித்தியாலய மாணவர்களால் மட்டக்களப்பு நகரில் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது சம்பந்தப்பட்டவர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்

இதேவேளை மட்டக்களப்பு திருமலை வீதியைச்சேர்ந்த ரெங்கசாமி ரமணி சுப்பம்மாள் என்பவரின் அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது


மட்டு மாநகரில் .........
மீண்டும் உங்களை அழைக்கின்றது
**ஈஸ்வரா படமாளிகை**
இன்று முதல்......... தினமும் { காலை 10.30 / பிற்பகல் 2.30 }
அக்ஷன் கிங் அர்ஜுன் நடித்த
நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

மன்னவரு சின்னவரு



**கணினி விற்பனைக்கு**
பல நவீன வசதிகளுடனான Pentiam II கணனி குறைந்த விலையில் விற்பனைக்குள்ளது.
Canan BIC 265 Colour Printer ? i'm Sub Boofer System போன்ற எல்லா வசதிகளும் கூடியது.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
எம்.சந்திரன்
(தினக்கதிர் காரியாலயம்)


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.